செ.வெ.எண்.327 நாள்.21.05.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (21.05.2018) நடைபெற்றது.

நாடு முழுவதும் இன்று கொடுஞ்செயல் எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனையொட்டி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்(பொ) அவர்கள் உறுதிமொழியாக **அகிம்சை, சகிப்புத்தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எவ்வகையான கொடுஞ்செயல்களையும், வன்முறைகளையும், முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஊறு விளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடாவும், நாம் உறுதி கூறுகிறோம்** என வாசிக்க, அரசு அலுவலர்கள் பின் தொடர்ந்து கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) திரு.சிவக்குமார், முத்திரைப்பிரிவு தனி வட்டாட்சியர் திரு.பால்துரை உள்பட அனைத்து வட்டாட்சியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.